பக்கங்கள் :எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00


www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 209

# தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க

# சர்வதேச சமூகத்துக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு

## போர் நிறுத்த ஒப்பந்தம் மட்டுமே இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றும் என்கிறார் அரசியல்துறைப் பொறுப்பாளர்



கிளிநொச்சி,ஜூன்26

★இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் சர்வதேச சமூகத்தினர் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்து ஆதரிக்க முன்வரவேண்டும்.

★ அத்தோடு போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மேற்படி இரண்டு அம்சங்களையும் வலியுறுத்தி உள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நோர்வேயின் தலைநகரம் ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் இரண்டு நாள் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

அது தொடர்பாக 'தமிழ் நெற்' அரசியல்துறைப் பொறுப்பாளரைப் பேட்டி கண்டது. அந்தப் பேட்டியின் போதே சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்சொன்ன கருத்துக்களை வெளியிட்டார்.

இணைத்தலைமை நாடுகள் நிரந்தர அமைதி மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பன குறித்து ஆராயவுள்ளதை நாம் வரவேற்கின்றோம்.

இராணுவத் தீர்வு பயனற்றது என்றும் இரண்டு தரப்புகளும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பவேண்டும் என்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. நாம் இந்த நிலைப்பாட்டை வரவேற்கின்றோம்.

ஆனாலும் சர்வதேச நாடுகள் ஸ்ரீலங்கா, தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதத்தை நிறுத்துவதற்கான உருப்படியான, ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது குறித்து தமிழர்கள் கவலை அடைந்துள்ளனர்.

மிகக் குறிப்பாக தமிழ்மக்கள் மீதான அரசாங்கத்தின் இனச்சுத்திகரிப்பு, பயங்கரமான மனித உரிமை மீறல்கள் போன்ற மனித அவலங்களைப் போக்குவதற்கு சர்வதேச சமூகம் தலையிட்டு எதனையும் செய்யவில்லை. (08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ்மக்களின் கோரிக்கைகளை இணைத்தலைமை நாடுகளுக்கு விளக்குவேன்

### நோர்வே கவன ஈர்ப்புப் போராட்டத்தில் போவர் உறுதிமொழி

ஒஸ்லோ,ஜூன்26

''தமிழ்மக்களுடைய கோரிக்கைகளை இணைத் தலைமை நாடுகளிடம் எடுத்துவிளக்குவேன்'' - இவ்வாறு நோர்வே நாட்டின் இலங்கைக்கான சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் தெரிவித்தார்.

நேற்று ஒஸ்லோவில் நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தீவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் எமக்கு கவலையளித்துள்ளன. இவ்வாறான சம்பவங்களினால் இணைத்தலைமைநாடுகள் கூட கவலைகொண்டுள்ளன.

தமிழ் மக்களுடைய வேண்டுகோளை நான் கவனத்தில் எடுப்பேன். அது மட்டுமல்ல, இது குறித்து இணைத்தலைமை (08ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியாவில் மோதல்கள்

தொழும்பு, ஜூன் 26

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் படையினர் ஊடுருவியபோது மோதல் வெடித்தது என படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் 13 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் அது அறிவித்துள்ளது.

எனினும் தமது தரப்பில் எவரும் கொல்லப்படவில்லை என்றும் தமக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு இந்தியா, பிரிட்டன் உள்ளடக்கிய குழுவை நியமிக்குக!

### இணைத்தலைமை நாடுகளிடம் தமிழ் ஆர்வலர்கள் கோரிக்கை

கொழும்பு,ஜூன் 26

இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டக்கூடிய இலக்குடன் இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாக 'தொடர்புக் குழு' ஒன்றை இணைத் தலைமை நாடுகள் உருவாக்கவேண்டும்.

பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா ஜனநாயக மன்றம் இப்படிக் கோரியுள்ளது.

ஒஸ்லோவில் இன்று நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டை ஒட்டி அந்த அமைப்பு மின்னஞ்சல் மூலம் 'ஐ.ஏ. என்.எஸ்' செய்தி நிறுவனத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை உருவாக்கக் கூடிய சாத்தியம் இணைத் தலைமை நாடுகளிடம் இல்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஐ.நா. செயலர்கள் அடங்கிய குழு தனியாக ஒஸ்லோவில் இன்று இலங்கை நிலையை விவாதிக்கும்

கொழும்பு, ஜூன் 26

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கை சமாதான முயற்சிகளுக்கான இணைத்தலைமை நாடுகள் இன்று செவ்வாய்க்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தும் அதேவேளை, சர்வதேச ரீதியில் சமாதான ஆர்வலர்களாகச் செயற்பட்டுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பதவி வகித்த இருவர் உட்பட முக்கிய பிரமுகர்கள் சிலர் தனியே புறம்பாக ஒன்றுகூடி இலங்கை நிலைமையை விவாதிக்கவுள்ளனர்.

விடயமறிந்த இராஜதந்திர வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் இந்த சமாதான ஆர்வலர்களின் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பதவியை வகித்தவர்களான கொபி அனான், பூட்ரெஸ் பூட்ரெஸ் காலி ஆகியோரும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் ஐவரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஜூன் 26

குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மீசாலை தெற்கு சோலையம்மன் கோயிலடியைச்சேர்ந்தவர்களான வடிவேலு ரவீந்திரன்(வயது 32), சின்னத்தம்பி சிவந்தன் (வயது 27) ஆகியோர் கடந்த சனிக்கிழமை கொடிகாமம் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு கையொப்பம் இடச் சென்ற பின்னர் காணாமற்போயுள்ளனர் என அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த நவரத்தினம் கேதீஸ்வரன்(வயது 21) என்பவர் கடந்த (08ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியின் சில பகுதிகளில் மர்ம விமானம் அவதானிப்பு

கொழும்பு,ஜூன் 26

கண்டி மாவட்டத்தின் சில பகுதிகள் மீது அடையாளம் தெரியாத விமானம் ஒன்று பறந்தது என்ற தகவல் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கண்டி - அம்புங்கொறவிலுள்ள கிப்துல்கொலப் பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அடையாளம் தெரியாத மர்ம விமானம் ஒன்று வட்டமிட்டுப் பறந்திருந்ததாகப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த விமானம் சத்தம் எழுப்பாமல் பறந்தது என்று பொலிஸாரின் அவசர அழைப்புப் பிரிவு தொலைபேசி இலக்கமான 119 இற்கு (08ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸவின் சிலை உடைப்பு! குருநாகல் நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

குருநாகல், ஜூன் 26

குருநாகல் நகரில் அமைந்திருந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் உருவச்சிலை கடந்த வெள்ளியன்று அடையாளம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் செயலுக்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்று குருநாகல் நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி ஜயவிக்கிரம பெரேரா, (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## வடக்கு மாகாண சபை அலுவலகங்களிலுள்ள நாடளாவிய சேவையைச் சேர்ந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்தல்

வடக்கு மாகாண சபையில், கீழே தரப்பட்ட அட்டவணையின் படியான நாடளாவிய சேவையைச் சேர்ந்த பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இப்பதவிகளில் இணைந்துகொள்ள விரும்பும் நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, தமது விண்ணப்பங்களைத் தயார் செய்து, ''செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், விவசாயக் கட்டடத் தொகுதி, கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை'' என்னும் முகவரிக்கு 2007.07.16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பங்கள் திணைக்களத்தலைவரூடாக, விடுவிப்புத் தொடர்பான விதந்துரையுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்படுமிடத்து, பொருத்தமான அதிகாரியிடமிருந்து, விடுவிப்பைப் பெற்றுக்கொள்ளுதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாக இருக்கும். தெரிவுகள் நேர்முகப் பரீட்சை ஒன்றினூடாக மேற்கொள்ளப்படும்.

இந்நியமனங்கள் தொடர்பாக, வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும்.

பொது நிர்வாக சுற்றறிக்கை 09/2007க்கமைவாக இளைப்பாறிய உத்தியோகத்தர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**தெ.து.விஜயலட்சுமி,**
செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

### வடக்கு மாகாண சபையில் இணைவதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: ....................
2. சேவை, வகுப்பு/தரம்: ....................
3. தற்போது வகிக்கும் பதவி: ....................
4. தற்போதைய சேவை நிலையம்: ....................
5. முகவரி: ....................
6. தொலைபேசி இலக்கம்: ....................
7. முதல் நியமனத் திகதி: ....................
8. இணைந்துகொள்ள விரும்பும் பதவி விருப்பு ஒழுங்கில்:
....................
....................
....................

*குறித்த பதவிக்கு நான் தெரிவுசெய்து வடக்கு மாகாண சேவையில் கடமையாற்ற இத்தால் எனது விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், இப்பதவிக்கு நான் தெரிவுசெய்யும் பட்சத்தில் எனக்குரிய விடுவிப்பை முறைப்படி பெற்றுக்கொள்வேன் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

.................... ....................
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

**திணைக்களத்தலைவரின் சிபார்சு**

.................... ....................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் திகதி

### இலங்கை நிர்வாக சேவை

| தொ. இல. | பதவி | வகுப்பு | வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | செயலாளர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 2. | பிராந்திய ஆணையாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம் | வகுப்பு I | 1 | வவுனியா |
| 3. | பிராந்திய ஆணையாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம் | வகுப்பு I | 1 | யாழ்ப்பாணம் |
| 4. | ஆணையாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 5. | ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 6. | ஆணையாளர், காணி நிர்வாகத் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 7. | ஆணையாளர், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 8. | பணிப்பாளர், கிராம அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 9. | பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 10. | பணிப்பாளர், முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 11. | பணிப்பாளர், விளையாட்டுத் துறைத் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 12. | பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) திட்டமிடல் செயலகம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 13. | பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 14. | சிரேஷ்ட உதவிச் செயலாளர், மாகாணப் பொது நிர்வாக அமைச்சு | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 15. | உதவிச் செயலாளர், ஆளுநர் செயலகம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 16. | உதவிச் செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 17. | உதவிச் செயலாளர், உட்கட்டமைப்பு அபிவிருத்தித்திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 18. | உதவிச் செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 19. | ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 20. | உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 21. | உதவி ஆணையாளர் காணி, நிர்வாகத்துறைத் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 22. | உதவிப் பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 23. | உதவி உள்ளூராட்சி ஆணையாளர், (தலைமை அலுவலகம்) உள்ளூராட்சித் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை. |

### உள்ளூராட்சிச் சபைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 24. | செயலாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் | வகுப்பு II | 1 | யாழ்ப்பாணம் |
| 25. | செயலாளர், நகரசபை, சாவகச்சேரி | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 26. | செயலாளர், நகரசபை, பருத்தித்துறை | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 27. | செயலாளர், நகரசபை, வல்வெட்டித்துறை | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 28. | செயலாளர், பிரதேசசபை, சாவகச்சேரி | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 29. | செயலாளர், பிரதேசசபை, தீவகம் | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 30. | செயலாளர், பிரதேசசபை, ஊர்காவற்றுறை | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 31. | செயலாளர், பிரதேசசபை, நல்லூர் | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 32. | செயலாளர், பிரதேசசபை, வடமராட்சி தென்மேற்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 33. | செயலாளர், பிரதேசசபை, வடமராட்சி | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 34. | செயலாளர், பிரதேசசபை, வலிகாமம் வடக்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 35. | செயலாளர், பிரதேசசபை, வலிகாமம் கிழக்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 36. | செயலாளர், பிரதேசசபை, வலிகாமம் மேற்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 37. | செயலாளர், பிரதேசசபை, வலிகாமம் தெற்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 38. | செயலாளர், பிரதேசசபை, வலிகாமம் தென்மேற்கு | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 39. | செயலாளர், பிரதேசசபை, வேலணை | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம் |
| 40 | செயலாளர், பிரதேசசபை, கரைச்சி | வகுப்பு III | 1 | கிளிநொச்சி |
| 41. | செயலாளர், நகரசபை, மன்னார் | வகுப்பு III | 1 | மன்னார் |
| 42. | செயலாளர், பிரதேசசபை, மன்னார் | வகுப்பு III | 1 | மன்னார் |
| 43. | செயலாளர், பிரதேசசபை, மாந்தை மேற்கு | வகுப்பு III | 1 | மன்னார் |
| 44. | செயலாளர், பிரதேசசபை, முசலி | வகுப்பு III | 1 | மன்னார் |
| 45. | செயலாளர், பிரதேச சபை நானாட்டான் | வகுப்பு III | 1 | மன்னார் |

### இலங்கை கணக்காளர் சேவை

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் - நிதி - மாகாணத் திறைசேரி | வகுப்பு Cl.I | 1 | திருகோணமலை |
| 02. | பணிப்பாளர் - கணக்குகளும் சேவைகளும் - மாகாணத் திறைசேரி | வகுப்பு Cl.I | 1 | திருகோணமலை |
| 03. | உதவிபணிப்பாளர் - கணக்குகள் - மாகாணத் திறைசேரி | வகுப்பு Cl.II /III | 1 | திருகோணமலை |
| 04. | உதவிபணிப்பாளர் - பாதீடு - மாகாணத்திறைசேரி | வகுப்பு Cl.II /III | 1 | திருகோணமலை |
| 05. | ஆணையாளர் - வருமானத் திணைக்களம் | வகுப்பு Cl.I | 1 | திருகோணமலை |
| 06. | பிரதி ஆணையாளர் - வருமானத்திணைக்களம் | வகுப்பு Cl.III | 1 | திருகோணமலை |
| 07. | உள்ளகக் கணக்காய்வு கட்டுப்பாட்டாளர் | வகுப்பு Cl. I | 1 | திருகோணமலை |
| 08. | பிரதி உள்ளகக் கணக்காய்வு கட்டுப்பாட்டாளர் | வகுப்பு Cl. II | 4 | திருகோணமலை |
| 09. | பிரதம கணக்காளர் - விவசாய அமைச்சு | வகுப்பு Cl. I | 1 | திருகோணமலை |
| 10. | பிரதம கணக்காளர் - புனர்வாழ்வு அமைச்சு | வகுப்பு Cl. I | 1 | திருகோணமலை |
| 11. | பிரதம கணக்காளர் - மாகாண பொது நிர்வாக அமைச்சு | வகுப்பு Cl: I | 1 | திருகோணமலை |
| 12 | கணக்காளர் - ஆளுநர் செயலகம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 13 | உதவி ஆணையாளர் - மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | திருகோணமலை |
| 14 | கணக்காளர் - உட்கட்டமைப்பு பொறியியல் சேவையும் திணைக்களம் | வகுப்பு Cl. II | 1 | திருகோணமலை |
| 15 | கணக்காளர் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 16 | கணக்காளர் - நீர்பாசனத் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 17 | கணக்காளர் - காணி நிர்வாகத் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 18 | கணக்காளர் - கல்வித்திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 19 | கணக்காளர் - விளையாட்டுத்திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 20 | கணக்காளர் - ஆயுள்வேத மருத்துவத் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 21 | கணக்காளர் - கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 22 | கணக்காளர் - சமூக சேவைகள்திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 23 | கணக்காளர் - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 24 | கணக்காளர் - கைத்தொழில்துறைத்திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 25 | கணக்காளர் - முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 26 | கணக்காளர் - கிராம அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு Cl. II/III | 1 | திருகோணமலை |
| 27 | கணக்காளர் - வலயக் கல்விப் பணிமனை - வடக்கு | வகுப்பு Cl. III | 1 | வவுனியா |
| 28 | கணக்காளர் - வலயக்கல்விப் பணிமனை - தெற்கு | வகுப்பு Cl. III | 1 | வவுனியா |
| 29 | கணக்காளர் - வீதி அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | வவுனியா |
| 30 | கணக்காளர்-வலயக் கல்விப்பணிமனை - மன்னார் | வகுப்பு Cl. III | 1 | மன்னார் |
| 31 | கணக்காளர் - வலயக் கல்விப்பணிமனை, மடு | வகுப்பு Cl. III | 1 | மன்னார் |
| 32 | கணக்காளர் - சுகாதாரசேவைகள் திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | மன்னார் |
| 33 | கணக்காளர் - சுகாதாரசேவைகள் திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | கிளிநொச்சி |
| 34 | கணக்காளர் - திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | கிளிநொச்சி |
| 35 | கணக்காளர் - வலயக்கல்விப் பணிமனை | வகுப்பு Cl. III | 1 | கிளிநொச்சி |
| 36 | கணக்காளர் - வலயக்கல்விப் பணிமனை | வகுப்பு Cl. III | 1 | முல்லைத்தீவு |
| 37 | கணக்காளர் - சுகாதாரசேவைகள் திணைக்களம் | வகுப்பு Cl. III | 1 | முல்லைத்தீவு |
| 38 | கணக்காளர் - வலயக்கல்விப் பணிமனை - துணுக்காய் | வகுப்பு Cl. III | 1 | துணுக்காய் |
| 39 | கணக்காளர் - வலயக்கல்விப் பணிமனை- தென்மராட்சி | வகுப்பு Cl. III | 1 | யாழ்ப்பாணம் |
| 40 | கணக்காளர் - மாநகர சபை | வகுப்பு Cl. III | 1 | யாழ்ப்பாணம் |
| 41 | கணக்காளர் - நகரசபை - சாவகச்சேரி, | வகுப்பு Cl. III | 1 | யாழ்ப்பாணம் |
| 42 | கணக்காளர் - நகரசபை - பருத்தித்துறை, | வகுப்பு Cl. III | 1 | யாழ்ப்பாணம். |
| 43 | கணக்காளர் - வீதிஅபிவிருத்தித் திணைக்களம், | வகுப்பு Cl. III | 1 | யாழ்ப்பாணம் |

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல் பாடத்திட்டம் குறித்த இருநாள் கருத்தரங்கு

நல்லூர்,ஜூன் 26

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் உயிரியல் பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான உத்தேச உயிரியல் பாடத்திட்டம் (2010ஆம் ஆண்டிற்கானது) மற்றும் உயிரியல் பாடங்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் குறித்த கருத்தரங்கு நாளை புதன்கிழமை தொடக்கம் இரு தினங்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேற்படி கருத்தரங்கில் வட மாகாண கல்வி அமைச்சின் வளவாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்குவார்கள்.

உயிரியல் பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (203-111)

## மின் தடை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் குறைக்க மின்சார சபை நடவடிக்கை எடுக்கிறது

### பொது முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

குடாநாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் மின் தடை நேரத்தை மேலும் ஒரு மணித்தியாலத்தால் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சாரசபையின் பொது முகாமை யாளர் எஸ்.முத்துரட்னானந்தம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்:-

காங்கேசன் துறையில் இயங்கும் கூல் ஏயர் நிறுவனம் தற்போது ஐந்து மெகாவாட் மின்சாரத்தை வழங்கி வருகின்றது.

இதன் மூலம் ஓரளவு மின்விநியோகத்தைச் சீராக்க முடிகின்றது.

அந்த நிறுவனம் ஏழு மெகாவாட் மின்சாரத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

அதன் பொருட்டு பழுதடைந்த இயந்திரங்களைத் திருத்துவதற்கென கொழும்பில் இருந்து பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருத்த வேலைகள் முடிவடைந்ததும், தற்போது 2 1/2 மணித்தியாலமாக நடைமுறைப்படுத்தப்படும் மின்தடையை 1 1/2 மணித்தியாலமாகக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

இதன் மூலம் குடாநாட்டில் உள்ள சகல இடங்களுக்கும் சுழற்சி முறையிலான மின்சாரத்தை சீராக வழங்கக்கூடிய சூழலை இது உருவாக்கும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை- கூல் ஏயார் நிறுவனத்தின் சேவைக்காலம் இம்மாத இறுதியுடன் முடிவடைகின்றது.

அதன் சேவையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை நீடிப்பதற்கான அனுமதி அமைச்சரவையிடம் கோரப்பட்டுள்ளது- என்றார் அவர். (203)

## பண்டத்தரிப்பில் சேமிப்புக் கழகம் அங்குரார்ப்பணம்

வலி.தென்மேற்கு, ஜூன் 26

பண்டத்தரிப்பில் அன்னை வேளாங்கன்னி சமூக அபிவிருத்தி சேமிப்புக் கழகம் என்ற பெயரில் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக் கழகத்தின் உறுப்பினர்கள் 26 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்கு யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (202-135)

## மோசடிகள் தொடர்பாகக் கைதானவரின் வங்கிக் கணக்கை முடக்க நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூன் 26

தனியார் வங்கிகளில் வேலை பெற்றுத் தருவதாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் தெரிவித்து மோசடி செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரின் வங்கிக் கணக்குகளை பரிசோதனையிடவும், முடக்கவும் யாழ்.நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் முறைப்பாடு குறித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் கொட்டாஞ்சேனையில் கைது செய்திருந்தனர். இவரைக் கடந்த 21 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் பிரஸ்தாப நபரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து நீதிமன்றில் ஆஜர் செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து சிறைச்சாலை ஆணையாளரால் யாழ்.நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பொருத்தமான நேரத்தில் அவரை ஆஜர் செய்வதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது.

அன்றைய தினம் நடைபெற்ற விசாரணையில் அறிக்கை ஒன்றை கோப்பாய் பொலிஸார் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதனையிடவும் முடக்கவும் அனுமதி வழங்குமாறு அறிக்கையில் கேட்கப்பட்டது. அந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் பொலிஸாருக்கு அதற்கு அனுமதி வழங்கினார். அத்துடன் பிரஸ்தாப நபரின் கொட்டாஞ்சேனை வீட்டை சோதனையிடவும் பொலிஸாருக்கு நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார். (202)

## சோதி வேம்படி வித்திக்கு மலசலகூடத்தொகுதி

வலி.தென் மேற்கு, ஜூன் 26

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்திற்கு மலசலகூடத்தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியுதவியை யுனிசெப் நிறுவனம் வழங்கவுள்ளது.

இத் தகவலை வித்தியாலய அதிபர் ரி. அருட்பிரகாசப்பிள்ளை தெரிவித்தார். (203-135)

## வலி.தென்மேற்கில் உணவுப் பண்டங்களின் விலைகள் உயர்வு

வலி.தென்மேற்கு, ஜூன் 26

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள உணவகங்களில் அதிகரித்த விலையில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தேநீர் மற்றும் வடை, வாய்ப்பன், தோசை, றோல் போன்ற உணவுப் பொருள்களே இவ்வாறு அதிகரித்த விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை 55 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதன் விளைவே இத்தகைய விலை உயர்வுகளுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (203-135)




பசுபிக் ஆசிய மூலவள நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்திற்கென சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பகுதிக்குட்பட்ட தெரிவான பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை அண்மையில் அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளை முதலாவது படத்திலும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம் பயனாளிகளுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.




## தென்மராட்சியில் விசேட தேவையுடையோருக்கு பிரதேச செயலகத்தால் தொழிற்பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 26

தென்மராட்சிப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய 16 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாருக்கும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஓவியம், சிற்பம், சித்திரம், கைவினைப் பொருள்கள் தயாரிப்பு ஆகிய பயிற்சிகள் ஆறுமாத காலத்திற்கு வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் பயிற்சி முடிவில் ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சிநெறிகளில் பங்குபற்ற விரும்பும் குறிப்பிட்ட தகைமையுடையோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சமூக சேவைகள் பிரிவில் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207-75)

## சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கு மூன்று கள நிலையங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 26

குடாநாட்டில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளை இயக்குவதற்கான கள நிலையங்கள் (Base Stations) 3 முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலேயே இந்தக் கள நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு, எடுத்து வரப்பட்டுள்ள சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் ஓரிரு தினங்களில் விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும். வார நடுப்பகுதி முதல் பாவனையாளர்களுக்கு இந்த தொலைபேசிச் சேவை வழங்கப்படும்.

இந்த இணைப்பு 060 221 என்ற தொடரிலக்கத்தில் செயற்படும்.

இத் தொலைபேசிகளைப் பாவனையாளர்கள் தாம் விரும்பும் இடத்திற்குக் கொண்டு சென்று இணைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும். (202)

## காங்கேசன்துறைமுகத்தில் ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களில் பொருள் இறக்கும் பணி

யாழ்ப்பாணம்,ஜூன் 26

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் கட்டடப் பொருள்களுடன் மூன்று கப்பல்கள் ஒரே நேரத்தில் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இக் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தனியார் வர்த்தகர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் ''டப்ளின்'', ''ஜெனி கிளிப்பர்'' ஆகிய இரு கப்பல்களிலும் எடுத்துவரப்பட்டுள்ளன. ''வின்ரன்'' கப்பலில் சிமெந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்த 3 கப்பல்களும் ஒரே நேரத்தில் சனிக்கிழமை காங்கேசன்துறையை வந்தடைந்தன.

இக்கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய துறைமுகங்களில் மாறி மாறி பொருள்கள் இறக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தனியார் [illegible] பொருள்களே [illegible] வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

## வாசகருக்கு வந்த பதில்

## சேவை தொடர்கின்றது

''775 இலக்க பஸ் சேவையை ஆரம்பிக்க ஆவன செய்யுங்கள்'' என்ற வகையில் 08.06.2007 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் மாணவர் சார்பில் தீபன் என்பவரால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக பின்வரும் விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிர்க்கமுடியாத சில காரணங்களால் மேற்படி 775 பாதை (சங்கானை - சுன்னாகம்) பேருந்துச் சேவை 16.05.2007 இலிருந்து 24.05.2007 வரை செயலாற்றவில்லை. எனினும் 25.05.2007 இலிருந்து இச்சேவை தடங்கலின்றித் தொடர்ந்து நடைபெறுகின்றது.

பொதுமுகாமையாளர், இ.போ.ச (வடக்கு).

## பயனாளிகளின் ஒத்துழைப்பு இன்றி சீர்கேடுகளை நிவர்த்திக்க முடியாது

'உதயன் பத்திரியில் 15.06.2007 ஆம் திகதிய செய்தி தொடர்பாக:-

எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட நலன்புரி நிலையங்களின் வசிக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் பல நிறைவேற்றப்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட நலன்புரி நிலையங்களில் வசிக்கும் 220 குடும்பங்களின் பாவனையின் பொருட்டு 42 மலசலகூடங்களும் 15 குழாய்க்கிணறுகள், மற்றும் ஒரு திறந்த கிணறு என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இது வேறு எந்த நலன் புரி நிலையத்துக்கும் வழங்கப்பட்ட வசதிகளுக்கு குறைவானதல்ல.

மேலும் வசதிகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகள் நிதிபெறும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டும் உள்ளன. நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் இவ் வசதிகள் மேலும் மேம்படுத்தப்படும்.

ஆயினும் அளிக்கப்பட்ட வசதிகள் மூலமாக சிறந்த பயனைப் பெற்றுக்கொள்வதென்பது அவற்றைப் பயன்படுத்தும் பயனாளிகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இடவசதியற்ற நிலையில் வழங்கப்பட்ட பொதுக் கழிப்பறைகள் உரிய முறையில் பயன்படாமையாலும், பயனாளிகள் பராமரிப்பு இன்றியும், பராமரிப்பை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காமை காரணமாகவும் சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றன.

போதிய நிதி வசதி மட்டுமன்றி பயனாளிகளின் ஒத்துழைப்பும் கிடைத்தால் [illegible] சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்படமுடியும்.

பிரதேச செயலாளர், வலி.தெற்கு, உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வடக்கு மாகாண சபை அலுவலகங்களிலுள்ள நாடளாவிய சேவையைச் சேர்ந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்தல்

### இலங்கை பொறியியலாளர் சேவை

| தொ. இல. | பதவி | வகுப்பு | வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு I | 1 | கிளிநொச்சி |
| 2. | நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு I | 1 | கிளிநொச்சி |
| 3. | நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் | வகுப்பு I | 1 | முல்லைத்தீவு |
| 4. | பொறியியலாளர், மாநகரசபை | வகுப்பு I | 1 | யாழ்ப்பாணம். |
| 5. | பிரதம பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 6. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு I | 1 | திருகோணமலை |
| 7. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு II | 1 | வவுனியா |
| 8. | பொறியியலாளர், நீர்ப்பாசன அலுவலகம் | வகுப்பு I | 1 | வவுனியா |
| 9. | பொறியியலாளர், நீர்ப்பாசன அலுவலகம் | வகுப்பு I | 1 | செட்டிக்குளம், வவுனியா |
| 10. | பொறியியலாளர், நீர்ப்பாசன அலுவலகம் | வகுப்பு I | 1 | மன்னார். |
| 11. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு II | 1 | முல்லைத்தீவு |
| 12. | பிரதம பொறியியலாளர், பிரதிப் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு I | 1 | முல்லைத்தீவு |
| 13. | பொறியியலாளர், நீர்ப்பாசன அலுவலகம் | வகுப்பு I | 1 | வவுனிக்குளம், முல்லைத்தீவு |
| 14. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு I | 1 | முத்தையன் கட்டு, முல்லைத்தீவு |
| 15. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனத் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு II | 1 | கிளிநொச்சி |
| 16. | பொறியியலாளர், பிரதி நீர்ப்பாசனத் பணிப்பாளர் திணைக்களம் | வகுப்பு II | 1 | கிளிநொச்சி |
| 17. | பொறியியலாளர், நீர்ப்பாசன அலுவலகம் | வகுப்பு II | 1 | யாழ்ப்பாணம். |
| 18. | பிரதிச் செயலாளர் (தொழில்நுட்பம்), புனர்வாழ்வு அமைச்சு | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 19. | பிரதிப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 20. | பிரதம பொறியியலாளர் (வடிவமைப்பு), கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 21. | பொறியியலாளர் (வடிவமைப்பு), கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு II | 1 | திருகோணமலை |
| 22. | நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு III | 1 | யாழ்ப்பாணம். |
| 23. | நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு III | 1 | கிளிநொச்சி |
| 24. | நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் | வகுப்பு III | 1 | வவுனியா |
| 25. | பிரதிப் பணிப்பாளர் (நிர்மாணம்), சுகாதார அமைச்சு | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 26. | பொது மருத்துவப் பொறியியலாளர், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | வகுப்பு III | 1 | திருகோணமலை |
| 27. | பணிப்பாளர், பாடசாலை வேலைகள் கல்வி அமைச்சு | வகுப்பு III | 1 | திருகோணமலை |

### கல்வி நிர்வாக சேவை ஆளணி வெற்றிடம்

| தொ. இல. | பதவி | சேவை/ வகுப்பு | வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர்/சிரேஷ்ட மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு | இகநிசே 1 | 1 | திருகோணமலை |
| 2. | உதவிச் செயலாளர் (முஸ்லிம்), கல்வி அமைச்சு | இகநிசே 11 | 1 | திருகோணமலை |
| 3. | உதவிச் செயலாளர் (தமிழ்), கல்வி அமைச்சு | இகநிசே11 | 1 | திருகோணமலை |
| 4. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), கல்வி அமைச்சு | இகநிசே 11 | 1 | திருகோணமலை |
| 5. | மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) மாகாணக் கல்வித் திணைக்களம் | இகநிசே 1 | 1 | திருகோணமலை |
| 6. | மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), மாகாணக் கல்வித் திணைக்களம் | இகநிசே 1 | 1 | திருகோணமலை |
| 7. | கல்விப் பணிப்பாளர் (சிங்களம்), மாகாணக் கல்வித் திணைக்களம் | இகநிசே 11 | 1 | திருகோணமலை |
| 8. | கல்விப் பணிப்பாளர் (முஸ்லிம்), மாகாணக்கல்வித் திணைக்களம் | இகநிசே 11 | 1 | திருகோணமலை |
| 9. | உதவிக்கல்விப் பணிப்பாளர் (சிங்களம்), மாகாணக்கல்வித் திணைக்களம் | இகநிசே 111 | 1 | திருகோணமலை |
| 10. | உதவிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), மாகாணக் கல்வித் திணைக்களம் | இகநிசே 111 | 1 | திருகோணமலை |
| 11. | உதவிக்கல்விப்பணிப்பாளர் (பரீட்சித்தலும், மதிப்பிடலும்) | இகநிசே 111 | 1 | திருகோணமலை |
| 12. | உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ், கணிதம், விஞ்., ஆங்கி., உ.கல்வி, ச.கல்வி, தகவல் தொ.நு., அழகியல், மு.கல்வி, ஆர.கல்வி), மாகாணக்கல்வித் திணைக்களம் | இகநிசே 11/111 | 1 | திருகோணமலை |
| 13. | மேலதிகக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை | இகநிசே 1 | 1 | யாழ்ப்பாணம் |
| 14. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 1 | 1 | முல்லைத்தீவு |
| 15. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | கிளிநொச்சி |
| 16. | பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக்கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | முல்லைத்தீவு |
| 17. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | துணுக்காய் |
| 18. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மடு |
| 19. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா வடக்கு |
| 20. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா தெற்கு |
| 21. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வலிகாமம் |
| 22. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | கிளிநொச்சி |
| 23. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | முல்லைத்தீவு |
| 24. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | துணுக்காய் |
| 25. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மன்னார் |
| 26. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மடு |
| 27. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா வடக்கு |
| 28. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா தெற்கு |
| 29. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | யாழ்ப்பாணம் |
| 30. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வலிகாமம் |
| 31. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தென்மராட்சி |
| 32. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தீவகம் |
| 33. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | கிளிநொச்சி |
| 34. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | முல்லைத்தீவு |
| 35. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | துணுக்காய் |
| 36. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மன்னார் |
| 37. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மடு |
| 38. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா வடக்கு |
| 39. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா தெற்கு |
| 40. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வலிகாமம் |
| 41. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தென்மராட்சி |
| 42. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தீவகம் |
| 43. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | கிளிநொச்சி |
| 44. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | முல்லைத்தீவு |
| 45. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | துணுக்காய் |
| 46. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மன்னார் |
| 47. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மடு |
| 48. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா வடக்கு |
| 49. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா தெற்கு |
| 50. | பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே11 | 1 | யாழ்ப்பாணம் |
| 51. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு),வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வலிகாமம் |
| 52. | பிரதிக்கல்வி பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தென்மராட்சி |
| 53. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வடமராட்சி |
| 54. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | தீவகம் |
| 55. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | கிளிநொச்சி |
| 56. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | முல்லைத்தீவு |
| 57. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | துணுக்காய் |
| 58. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மன்னார் |
| 59. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | மடு |
| 60. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா வடக்கு |
| 61. | பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் செயற்பாடு), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 11 | 1 | வவுனியா தெற்கு |
| 62. | உதவிக் கல்விப் பணிப்பாளர் (சிங்களம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 111 | 1 | வவுனியா தெற்கு |
| 63. | உதவிக் கல்விப் பணிப்பாளர் (முஸ்லிம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 111 | 1 | வவுனியா தெற்கு |
| 64. | உதவிக் கல்விப் பணிப்பாளர் (முஸ்லிம்), வலயக் கல்வி அலுவலகம் | இகநிசே 111 | 1 | மன்னார் |
| 65. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | யாழ்ப்பாணம் |
| 66. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | சாவகச்சேரி |
| 67. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | பருத்தித்துறை |
| 68. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | கரவெட்டி |
| 69. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | கோப்பாய் |
| 70. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | உடுவில் |
| 71. | கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | நல்லூர் |
| 72. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | சங்கானை |
| 73. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | காரைநகர் |
| 74. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/11 | 1 | வேலணை |
| 75. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | ஊர்காவற்றுறை |
| 76. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | நெடுந்தீவு |
| 77. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | சண்டிலிப்பாய் |
| 78. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | தெல்லிப்பழை |
| 79. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | மருதங்கேணி |
| 80. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | கிளிநொச்சி |
| 81 | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | கண்டாவளை |
| 82. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | பளை |
| 83. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | பூநகரி |
| 84. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | கரைத்துறைப்பற்று |
| 85. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | ஒட்டுசுட்டான் |
| 86. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | புதுக்குடியிருப்பு |
| 87. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | துணுக்காய் |
| 88. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | மாந்தை கிழக்கு |
| 89. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | மன்னார் |
| 90. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | நானாட்டான் |
| 91. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | முசலி |
| 92. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | மடு |
| 93. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | மாந்தை மேற்கு |
| 94. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | வவுனியா தெற்கு (தமிழ்) |
| 95. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | நெடுங்கேணி |
| 96. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | வவுனியா தெற்கு (சிங்களம்) |
| 97. | கோட்டக் கல்வி அலுவலர், கோட்டக் கல்வி அலுவலகம் | இகநிசே 11/111 | 1 | வெண்கலச் செட்டிக்குளம் |
| 98. | உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ், கணி, விஞ், ஆங், உடற்கல்வி, சமூகல்வி, தொடர்பாடல் தொ.நு., அழகியல், முறைகல்வி, வி.கல்வி, தொநு, ஆர.கல்வி, இந்துசமயம்) | இகநிசே 11/111 | 155 | 12/வலயம் |
| | | மொத்தம் | 252 | |

* ஒவ்வொரு வலயத்திலும் (03 இல் கூறப்பட்ட பாடங்கள்) 13 பாடங்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் வவுனியா தெற்கு வலயத்தில் விஞ்ஞான பாடத்திற்கு வெற்றிடம் இல்லை.

### இலங்கை விவசாய சேவை

| தொ. இல. | பதவி | சேவை/தரம் | ஆளணி வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | பிரதி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 11 | 1 | முல்லைத்தீவு |
| 2. | பிரதி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 11 | 1 | கிளிநொச்சி |
| 3. | உதவி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 111 | 3 | வவுனியா |
| 4. | உதவி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 111 | 2 | மன்னார் |
| 5. | உதவி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 111 | 2 | முல்லைத்தீவு |
| 6. | உதவி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 111 | 2 | கிளிநொச்சி |
| 7. | உதவி விவசாயப் பணிப்பாளர் | இ.வி.சேவை 111 | 3 | யாழ்ப்பாணம் |

### தகவல் வழங்கல் முகாமைத்துவ நிலையம்

| தொ. இல. | பதவி | வகுப்பு | வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர், தகவல் வழங்கல் முகாமைத்துவ நிலையம். | பூகோள தகவல் தொகுதி (GIS) பற்றி முன்அனுபவமுள்ள நாடளாவிய சேவை வகுப்பு 1 உத்தியோகத்தர் | 1 | திருகோணமலை |

### இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை

| தொ. இல. | பதவி | சேவை/வகுப்பு | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சேவை நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | பிரதி மாகாணப் பணிப்பாளர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 1 | 1 | திருகோணமலை |
| 2. | விவசாய நிபுணர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 11 | 1 | திருகோணமலை |
| 3. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 1 | திருகோணமலை |
| 4. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 5 | யாழ்ப்பாணம் |
| 5. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 2 | கிளிநொச்சி |
| 6. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 3 | மன்னார் |
| 7. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 2 | வவுனியா |
| 8. | கால்நடை வைத்தியர் | இ.கா.உ.சுகாதார சேவை வகுப்பு 111 | 3 | முல்லைத்தீவு |

### இலங்கை மருத்துவ உத்தியோகத்தர் சேவை

| தொ. இல. | பதவி | வகுப்பு | வெற்றிட எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|---|
| 1. | பிரதிமாகாணப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | வகுப்பு 1 | 1 | வவுனியா |
| 2. | பிரதிமாகாணப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | வகுப்பு 1 | 1 | கிளிநொச்சி |
| 3. | பிரதிமாகாணப் பணிப்பாளர், பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | வகுப்பு 1 | 1 | முல்லைத்தீவு |

(A/5255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி, நாகர்கோவில் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகளால் ஊடுருவ முடியாது

## யாழ்.படைகளின் தளபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நாகர் கோவில் தொடக்கம் கிளாலி வரையான பிரதேசம் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்தப் பகுதிகளுக்கு புலிகளால் எக்காரணம் கொண்டும் முன்னேற முடியாத அளவுக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தால் கடந்த வெள்ளிக்கிழமை குடா நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பொதுமக்களின் வாழ்வில் இயல்பு நிலையைப் பேணுவதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகின்றன. சுமார் 10 தொன் உணவுப் பொருள்கள் தினமும் மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

தடையற்ற - தொடர்ச்சியான உணவுப் பொருள்கள் விநியோகத்தின் மூலம் பல பொருள்களின் விலைகள் யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சியடைந்துள்ளன .

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் உள்ளூர் விமான சேவைகள் இடம் பெற்று வருகின்றன .

அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை, வணக்கஸ் தலங்கள் ஆகியவற்றிற்குப் பொதுமக்கள் சென்று வரக் கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன- என்று தெரிவித்தார். (அ-202)

# பஸ் கட்டணம் அடுத்தமாதம் உயர்த்தப்படும்

கொழும்பு ஜூன் 26

அடுத்த மாதம் தொடக்கம் இ.போ.ச. பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

அரசின் தேசிய போக்குவரத்து கட்டளைக் கொள்கைக்கு அமைய தனியார் பஸ் கட்டண உயர்வுடன் இ.போ.ச.பஸ் கட்டணமும் அதிகரிக்கப்படும் என்று தெரிகின்றது. போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும அண்மையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடத்திய ஒரு கூட்டத்தில் பஸ் கட்டணம் உயர்த்தவிருப்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆனால், உத்தேச பஸ் கட்டண உயர்வின் விகிதாசாரம் இன்னமும் முடிவுசெய்யப்படவில்லையென்று தெரிகின்றது.

எரிபொருள் விலை உயர்வின் காரணமாக பஸ்கட்டண உயர்வுக்கு தாங்கள் இணங்க வேண்டியிருப்பதாக போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பான இறுதிமுடிவு அடுத்த வாரம் எடுக்கப்படவிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (ப)

# இலங்கையின் கடல் எல்லைத் தூரத்தை ஆயிரம் மைலாக விஸ்தரிக்க முடிவு

கொழும்பு ஜூன் 26

இலங்கை தனது கடல்எல்லையை ஆயிரம் கடல் மைலாக விரிவாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்க இருக்கின்றது. தற்போதுள்ள 200மைல் கடல் எல்லையை மேலும் 800 கடல் மைல்களாக விரிவாக்கிக்கொள்ள இலங்கை விரும்புவதாக மீன்பிடி மற்றும் நீர் வாழ் உயிரினங்கள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மற்றும் விஞ்ஞானத்துறை ஆய்வுகளுக்கு இக்கடல் எல்லை விஸ்தரிக்கப்படுவது அவசியம்என்று கருதப்படுகிறது. கடற்படுக்கையில் காணப்படும் படிவுகளின் தன்மையை ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு இதுஅவசியம்என்று கருதப்படுகின்றது. தற்போதைய பருவநிலை மாற்றமடைந்ததுடன் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

1982ஆம் ஆண்டு ஐ.நா. நிறைவேற்றிய கடல்சட்டம் தொடர்பான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த கடல் எல்லை நிர்ணயிக்கப்படும் என்றுதெரிகின்றது.

வடக்கின் கடற்பகுதியிலிருந்து 400கடல் மைல் எல்லையாகக் கணிக்கப்படும் என்றும் தெற்கில் இது ஆயிரம் கடல் மைல்களாகஇருக்கும்என்றும் அமைச்சின்ஆலோசகர் டாக்டர் என்.பி.விஜயானந்தகூறினார்.

இந்த ஆய்வுகளை நிகழ்த்தலும் எல்லைகளை நிர்ணயித்து அடையாளமிடவும் அமைச்சுடன் ஜெம்ஸ் என்ற பிரிட்டிஷ் நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்தப்பணிக்கு 8 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும். மீன்பிடி அமைச்சும் நொராட் நிறுவனமும் இந்தச் செலவுகளை ஏற்றுக் கொள்ள விருக்கின்றன.

இந்த ஆய்வின் மூலம் பெறப்படும் புள்ளி விவரம் ஐ.தே.கவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை அதன் தென்பகுதியில் ஆயிரம் கடல்மைல் தூரத்தைப் பயன்படுத்தும் ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொள்ளும். (ப)

## பயிலுநர் சிப்பாய் சுருக்கிட்டு தற்கொலை

கொழும்பு,ஜூன் 26

பெல்வத்தை இராணுவ பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றுவந்த இராணுவ சிப்பாய் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை 23ஆம் திகதி தற்கொலை செய்து கொண்ட 21வயதான இந்த சிப்பாய் சேனப்புர கல்னேவ என்ற இடத்தைச் சேர்ந்தவர். தற்கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. (ப)

## பற்றைகள் நிறைந்த வீதி

யாழ்ப்பாணம் ஜூன் 26

அளவெட்டி வடக்கில் இருந்து இளவாலை மெய்கண்டான் - சித்திரமோழிச் சந்திவரை செல்லும் ஆலடி வீதியின் இரு பக்கமும் இலந்தை முட்கள் படர்ந்து பெரும் பற்றைக் காடாக உள்ளது. இதனால் இவ்வீதியூடான போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை - இப்பகுதியில் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. பன்றிகள் மரவள்ளி, வாழை போன்ற பயிர்களை நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக புனித சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.பிதா கலாநிதி ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசமும் முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி இடைநிலை பாடசாலை மேற்பார்வையாளரான செல்வி ஸ்ரெலா செல்வமணி செல்லத்துரையும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் 2006 இல் கல்வி, விளையாட்டு மற்றும் பிற நிகழ்வுகளில் சிறப்பாக செயற்பட்ட மாணவ, மாணவிகளுக்கான விருதுகள், கிண்ணங்கள் மற்றும் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன. (1-95)

## கந்தவன உற்சவத்தை ஒட்டி விசேட பஸ் சேவை

வல்வெட்டித்துறை, பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவசுவாமி ஆலய பெருந் திருவிழாவின் இறுதிநாள் உற்சவங்களை ஒட்டி விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை இந்த விசேட சேவை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-203)

## கசிப்பு உற்பத்தி செய்த ஐவருக்கு இரண்டரை லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் ஜூன் 26

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட ஒரு தம்பதி உட்பட ஐந்து பேருக்கு இரண்டு லட்சத்து 47ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தினரால் சாவகச்சேரி நிதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிவான் கோவிலாக் கண்டியைச் சேர்ந்த தம்பதியருக்கு 85 ஆயிரம் ரூபாவும் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்கு 90 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த ஒருவருக்கு 65ஆயிரம் ரூபாவும்மட்டுவிலைச் சேர்ந்த ஒருவருக்கு 7ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதித்தார். (202-207)

# மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் குழுவின் தலைவர் மீது கண்டனக் கணை

## அரசின் சார்பாக சட்டமா அதிபர் கடிதம்

கொழும்பு,ஜூன் 26

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளை மேற்பார்வை செய்யும் சர்வதேச சுதந்திரக் கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதி யரசர் பி.என்.பகவதி கண்டனத்துக் குள்ளாகியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நிறுவப்பட்ட இந்த விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அவமானப்படுத்தும் விதத்தில் நீதியரசர் பகவதி கருத்துக்களை வெளியிட்டுள்ளாரென, சட்டமா அதிபர் கடிதம் மூலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சட்டமா அதிபர். சி.ஆர்.டி.சில்வா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

கேள்விகளுக்கு உட்படுத்தப்படும் சாட்சிகள் பற்றியும், விசாரணைகளுக்கான பொது நடைமுறை குறித்தும் நீங்கள் கருத்து வெளியிட்டுள்ளீர்கள். இக்கருத்துக்கள், கௌரவ ஆணையாளர்களை, நேரடியாக அவமானப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

இவர்களை இலங்கையின் அரும்பெரும் பொக்கிஷங்களான புதல்வர்களாகவும், புதல்விகளாகவும் பெருமதிப்போடு இலங்கை கணிப்பீடு செய்கிறது.

பி.என்.பகவதி முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற பிரதம நீதியரசராவார். சர்வதேச மட்டத்தில் ஒரு திறமையான ஜூரி என மதிக்கப்படுபவர். சட்டமா அதிபர் தமது முறையீட்டுக் கடிதத்தில் நீதியரசர் பகவதியால் விடுவிக்கப்பட்ட இரு அறிக்கைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். பகவதி தமது அறிக்கைகளில், 'ஆணைக்குழு நிறுவப்பட்டது முதல் மிகச் சொற்ப பணியையே ஆற்றியுள்ளது. இதனால் கடைப் பிடிக்கப்பட்ட நடைமுறைகள் அதிருப்தியானவை மிதமிஞ்சிய காலதாம தங்கள்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா, இலங்கை அரசின் சார்பாகவே தாம் இக்கடிதத்தை எழுதியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



அண்மையில் நடைபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் நெல்லியடிக் கிளை திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

அருகில் நெல்லியடிக் கிளையின் விற்பனை முகாமையாளர் கு.ஆறுமுகன், யாழ். பிராந்திய முகாமையாளர் ஆர். எல்.அரியநாயகம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## கிளிநொச்சி அரச அதிபராக வேதநாயகன் நியமனம்

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி அரச அதிபராக நா.வேதநாயகன் கடந்த மாதம் பதவி ஏற்றுள்ளார்.

2003ஆம் ஆண்டுமுதல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபராக இவர் கடமையாற்றி வந்தவர்.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், நல்லூர் ஆகிய இடங்களில் இவர் முன்னர் பிரதேச செயலராகக் கடமையாற்றியுள்ளார். (203)

# மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

**உதைபந்தாட்டம்**

*19 வயதுப் பிரிவு*-ஆண்கள் - இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி,

*17 வயதுப் பிரிவு*- ஆண்கள் - அருணோதயாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, வேலணை மகா வித்தியாலயம்.

**மேசைப் பந்து**

*19 வயதுப் பிரிவு*- ஆண்கள்- சென். ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யூனியன் கல்லூரி .

*19 வயதுப் பிரிவுப் பெண்கள்*- யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**கரபந்து**

*15 வயதுப் பிரிவு*- ஆண்கள்- ஆவரங்கால் மகாஜனா வித்தி., புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

*17 வயதுப் பிரிவு*- ஆண்கள்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் ம.வி., அச்சுவேலி மத்திய கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு*- ஆண்கள்- புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

*15 வயதுப் பிரிவு*- பெண்கள்- சங்கானை சிவப்பிரகாசம் ம.வி., மானிப்பாய் மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

*17 வயதுப் பிரிவு*- பெண்கள்- சங்கானை சிவப்பிரகாசம் ம.வி, கைதடி நாவற்குழி அ.த.க.பா, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,

19 வயதுப் பிரிவு- பெண்கள்- மல்லாகம் ம. வி., புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, மட்டுவில் ம.வி.,

**பட்மின்ரன்**

*19 வயதுப் பிரிவு*- பெண்கள்- உடுவில் மான்ஸ் ம.வி., சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,

*19 வயதுப்பிரிவு ஆண்கள்* - உடுவில் மான்ஸ் ம.வி., சென்ஜோன்ஸ் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி

**வலைபந்து**

*15 வயதுப் பிரிவு பெண்கள்* - யூனியன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி

*17 வயதுப்பிரிவு பெண்கள்* - யூனியன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

*19 வயதுப் பிரிவு பெண்கள்* - உடுவில் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி

**சதுரங்கம்**

*15 வயதுப் பிரிவு பெண்கள்* - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய ம. வி.

*19 வயதுப் பிரிவு பெண்கள்* - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,

*15 வயதுப் பிரிவு ஆண்கள்* - ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்தியகல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி

*19 வயதுப் பிரிவு ஆண்கள்* - ஹாட்லிக் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்

**கூடைப்பந்து**

*19 வயதுப் பிரிவு ஆண்கள்* - யாழ்.மத்திய கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்* - திருக் குடும்ப கன்னியர்மடம், உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி

**கிரிக்கெற்**

19 வயதுப் பிரிவு ஆண்கள் - யாழ். இந்துக்கல்லூரி, மகாஜனாக்கல்லூரி, தும்பளை சிவப்பிரகாசம் வித்தி

**உடற்பயிற்சி**

*19 வயதுப் பிரிவு பெண்கள்* - மானிப்பாய் மகளிர் கல்லூரி, கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் ம.வி., சங்கானை சிவப்பிரகாசம் ம.வி.

19 வயதுப் பிரிவு ஆண்கள் - ஊர்காவற்றுறை புனித அந்தோனி யார் கல்லூரி, ஆனைக் கோட்டை பாலசுப் பிரமணியம் வித்தி, ஹாட்லிக் கல்லூரி. (202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

# கேள்வி அறிவித்தல் - 2007

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்களை 09.07.2007 ஆம் திகதி பி.ப.2 மணி வரை நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ்க்குறிப்பிட்ட தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடிதவுறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 11.07.2007 ஆம் திகதி மு.ப.11 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

03. கேள்விகள் 11.07.2007 ஆம் திகதி பி.ப. ஒருமணிக்கு திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொடர் இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத பெறுமதிசேர்வரி |
|---|---|---|---|---|
| 01 | கட்டாக்காலி நாய் அழிப்புத்தொட்டி அமைத்தல் | 2500.00 | 500.00 | 75.00 |

சி.வே.குலநாயகம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.
25.06.2007

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய



# வேட்டைத் திருவிழா விஞ்ஞாபனம்

27.06.2007 புதன் காலை 9 மணி

தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த தாயே வேட்டையாடி அருள்வாய்
பார் மேவு இமயப் பனி மேவு மலையில்
பாங்காய் வளர்ந்த தாயே வேட்டையாடி அருள்வாய்
நீர் மேவு நெடுங் கடலில் நீள் துயில் கொண்ட
நெடுமால் உடன் பிறந்த பின்னோய் வேட்டையாடி அருள்வாய்
சீர் மேவு தலங்கள் ஆறில் நின்றருளும்
செல்வக் குமரன் அன்னோய் வேட்டையாடி அருள்வாய்
பங்கயத்தான் நோக பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரியும் வீரமாகாளியே
எங்களின் பாவங்கள் இல்லாமல் போக
எழுந்தருளி வேட்டையாடி அருள்வாய் வீரமாகாளியே
குதிரை மீதமர்ந்து தெருவலம் நீ வந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய் வீரமாகாளியே
சங்குடன் சூலமும் வாளுடன் வில்லு மேந்தி
சஞ்சலம் தீர்த்திட வேட்டையாடி அருள்வாய் வீரமாகாளியே

கவியாக்கம்: மகாகவி சாகரம், மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன் J.P.
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி.)

★ வேட்டைத்திருவிழா நிகழ்வில் விசே மேளக்கச்சேரி

1] கோண்டாவில் V.K.கானமூர்த்தி [கலாபூஷணம்] அவரது புதல்வன் கிருஷ்ணதாசன் குழுவினர்

2] இணுவில் N.R.கோவிந்தசாமியின் புதல்வர்கள் [ஈஸ்வர ஞான சாயித்திய இசை அரசு]

நாளை (27.06.2007) புதன்காலை 9 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று அம்பாள் விசேட அலங்காரத்துடன் வீதி உலாவந்து வேட்டைத் திருவிழா நடைபெற்று அதனைத் தொடர்ந்து மகா பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும் என்பதனை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு: திருவிழா நிறைவு பெற்றதும் நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும்.

- வேட்டைத்திருவிழா உபயகாரர்

**ஆசிச்செய்திகள்**

அண்ட சராசரங்களை எல்லாம் அருளாட்சி புரிகின்ற அன்னை வீரமாகாளித் தாயே! வேட்டையாடி மக்களின் வினை தீர்க்க வாருமம்மா. மகிடாசுரனை வதம் செய்த வீரமாகாளியே! நம்நாட்டு மக்களின் இன்னல்களை எல்லாம் வேட்டையாடிடும் அம்மா. உன் அடியார்களுக்கெல்லாம் உன் அருளாசி கிடைக்க அருளாசி கூறுகின்றேன். அம்பாளின் முடிவுறாத் திருப்பணிக்கு அடியார்களை வாரி வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ்குருக்கள்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்,
பிரதமகுருவும், ஆதீனகர்த்தாவும்.

வேட்டைத் திருவிழாவில் அடியார்கள் யாவரும் பக்தியுடன் பங்குபற்றி வீரமாகாளி அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக!

"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவஸ்ரீ சி.செல்வராசக் குருக்கள்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்,
மகோற்சவ பிரதமகுருவும்,
ஆதீனகர்த்தாவும். (61905)

## மணிவிழாக் கண்ட மணி மாஸ்டரின் சேவை நயப்பு

### இரகுநாதன் சிவபாதசேகரம்

*S.L.P.S. SPL Trd. in P.E.T.,*
*B.A.Dip. in Ed.*



*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் சந்நிதியில் பிறந்து, கல்வி கற்று ஆசிரியப் பணியாற்றி, அதிபர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலையின் முதல்வராகப் பல வருடங்கள் சேவையாற்றி 16.06.2007 இல் ஓய்வுபெற்ற எம் மண்ணின் மைந்தனின் பொதுப்பணிகள், கல்விப்பணிகள், விளையாட்டுச் செயற்பாடுகள் என்பனவற்றைப் பாராட்டி, நீண்ட ஆயுளையும், சகல சௌபாக்கியங்களையும் கொடுக்க உலக மாதாவாகிய நயினை நாகபூஷணித் தாயைப் பிரார்த்தித்து இறைஞ்சுகின்றேன்.*

மு.ச.திருநாவுக்கரசு J.P.
இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்,
முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி,
(61934) நயினாதீவு.

**கருத்தரங்கு**

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த உதவியாளர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (75)

## பதவிப் பெயர்கள் மாற்றம்

குருநகர், ஜூன்26

இதுவரைகாலமும் புழக்கத்தில் இருந்து வந்த பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என்ற பதவிப் பெயரே இனிவரும் காலங்களில் நடைமுறையில் இருக்கும்.

இவ்விடயம் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எச்.ஏ.பி.ஹகாந்தலியனகே மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள பொதுச் சுற்றுநிருபம் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

இதேவேளை -

இதுவரை சுகாதார வைத் திய அதிகாரி என்று அழைக்கப்பட்ட பதவிப் பெயர் பிரிவுச் சுகாதாரப் பணிப்பாளர் என்ற பெயரில் அழைக்கப்படும் என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபத்தின்படி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் எனவும் -

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பிரிவுச் சுகாதாரப்பணிப்பாளர் அலுவலகம் எனவும் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (203-51)

## கண்ணீர் அஞ்சலி

எம்து பாடசாலையின் ஆசிரியை
**திருமதி இராஜஸ்ரீ சற்குணானந்த சர்மா**
அவர்களின் அன்பு மாமி
**திருமதி தங்கசாமி ஐயர் சாரதாம்பாள்**
அவர்கள் 23.06.2007 இல் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்:
பாடசாலைச் சமூகம்,
(61933) யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 22 - 07 - 1963



மறைவு 28 - 05 - 2007

### அமரர் பொன்னுத்துரை இர்ாசதுரை

(4ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

28.05.2007 அன்று ஜேர்மனியில் காலமான எமது குடும்ப விளக்கின் 31ஆம் நாள் கிரியைகள் நாளை (27.06.2007) புதன்கிழமையும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 01.07.2007 ஞாயிற்றுக்கிழமையும் ஜேர்மனியில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அதே நேரம் நாளை (27.06.2007) புதன் கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

B.S. *லேன்,*
*மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (61915)

தாய், மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 30 - 07 - 1934



உதிர்வு 07 - 07 - 2006

*அமரர்*

### சுப்பிரமணியம் அருமைநாயகம்

*திதி: ஏகாதசி (26.06.2007)*

ஆண்டொன்று சென்றது ஐயா
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?

*958/5, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (61936)

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

**P4 கணனி விற்பனைக்கு**

*A FEW DAYS USED*
INTEL 3.06 PROCESSOR
INTEL BOARD WITH 128 VGA 512 MB RAM ,80GB HARD DISK
DVD WRITER 4.1 CREATIVE WOOFER
*15 "SILVER MONITOR, M.M KEY BOARD, OPTICAL MOUSE*
(ONR YEAR WARRANTY FOR ALL)55,000/-
(61943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எதிர்மறைகளின் ஆட்சி நிலவும் அற்புதமான பூமி ஸ்ரீலங்கா!

''போர் நடக்கும். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இருக்கும். கடத்தலும் காணாமற்போகடித்தலும் தினமும் நடைபெறும். அதை விசாரிக்கச் சங்கங்களும் இருக்கும்.

''எதிர்மறைகளின் ஆட்சி நிலவும் அற்புதமான பூமி ஸ்ரீலங்கா.

''இரண்டையும் ஒரு நிறுவனமே கையாளும் அதிசயமும் இங்குதான் நிகழ்கின்றது.''

பூமிப் பந்தில் இலங்கைத்தீவின் உண்மையான நிலைவரத்தை - யதார்த்த சூழலை - அப்படியே படம் பிடித்துக் காட்டும் அற்புதமான வசனங்கள் இவை.

லண்டனிலிருந்தவாறு ஈழப் போராட்டத்தின் உண்மைச் சொரூபத்தை, ஊடறுத்துச் செல்லும் கூர்விழியோடும் தீர்க்கமான பார்வையோடும், நுண்ணிய நோக்கோடும், சுய பிரக்ஞையோடும், தனக்கேயுரிய தனித்துவத்தோடும் ஆராய்ந்து, ஆழமான கட்டுரைகள் மூலம், அர்த்தம் நிறைந்த சொல்லாடல்களோடு தமிழுல கத்துக்குப் படைத்து வரும் இதயச்சந்திரனின் பொன் எழுத்து வாசகங்கள் இவை.

புலம் பெயர்ந்த தேசத்தில் இருந்தபடி தமிழர் தேசத்தின் புலர்வுக்காக - விடியலுக்காக - வீறுகொண்டு போராடும் ஒரு சில மூத்த 'எழுத்துச் சமராடி'களில் இவர் குறிப்பிடத்தக்கவர். தன் மண்ணின் மீட்சிக்காக ஆயுதம் கொண்டு போராடிய முன்னாள் போராளி இன்று பேனா கொண்டு சமராடுகின்றார்.

''எதிர்மறைகளின் ஆட்சி நிலவும் அற்புதமான பூமி ஸ்ரீலங்கா'' - ஒரு வசனத்தில் இலங்கைத் தீவைப் படம் பிடித்துக் காட்டும் - அர்த்தங்கள் ஆயிரம் பொதிந்த - வாசகங்கள் இவை.

ஒரு வகையில் வஞ்சப் புகழ்ச்சி அல்லது உயர்வு நவிழ்ச்சி அணி இது. 'அற்புதமான பூமி ஸ்ரீலங்கா' என்பது 'அவலப் பூமி ஸ்ரீலங்கா' என்றிருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்குமோ.....?

யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முரண்பாடு இங்குதான் அரங்கேறுகின்றது.

ஜனநாயக ஆட்சி என்று பிரகடனப்படுத்திக் கொண்டு சர்வாதிகார நிர்வாகம் இங்குதான் கோலோச்சுகின்றது.

தணிக்கையே இல்லை என்று அறிவித்துக் கொண்டு ஆயுத முனையில் அச்சுறுத்தல் தணிக்கை இங்குதான் கட்டவிழ்கின்றது.

காருண்ய மகான் புத்தபகவான் பாதம் பதித்து சீலம் போதித்த புண்ணிய பூமி இதுவென, பௌத்தம் பெருமை பேசும் திவ்விய தீவு இலங்கை. இங்குதான் பௌத்த சீலத்தின் பெயரால் அதற்கு முற்றிலும் மாறான பேரினவாதக் கொடூரமும் மேலாண்மைத் திமிரும் உருக்கொண்டு செருக்கோடு அரசாட்சி புரிகின்றன.

தலைநகரிலிருந்து தமிழர்களை இரவோடு இரவாகப் பலவந்தமாக வெளியேற்றும் கொடூரம் ஒருபுறம் மும்முரமாக முன்னெடுக்கப்படும். அரசுத் தலைமை அதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும். பின்னர் அதற்கு எதிர்ப்பு சர்வதேச மட்டத்தில் கிளம்பியதும் அச் செயலுக்காக அரசே வருத்தம் தெரிவிக்கும். அந்தக் கொடூர நடவடிக்கை குறித்து விசாரணை நடக்கும் என்று அரசே அறிவிக்கும். அதேசமயம் அரசின் மற்றைய அங்கம் அந்தக் கொடூரத்தை நியாயப்படுத்தும். அக்கொடூரத்துக்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டதை அரசின் பிறிதொரு அங்கம் கடுமையாக விமர்சிக்கும்.

இப்படி முரண்பாடுகளின் சங்கமம் ஓர் ஆட்சியில் என்பது இந்த நாட்டில்தான் சாத்தியம்.

எதிர்மறை முரண்பாடுகளின் கருத்தியல் மோதலைத்தான் இப்போது இலங்கையில் சில படுகொலைகள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை தொடர்பாக சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவும் கிளப்பியிருக்கின்றது.

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் பதினேழு பணியாளர்கள் தொடர்பான விடயத்தில் குற்றச்சாட்டுக் கரம் அரசுப்படைகள் மீதே நீளுகின்றது. இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் அப்படித்தான் கூறியது.

இப்போது இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது புலன் விசாரணையை முன்னெடுப்பதற்கான சட்ட விவகாரங்களை அரசின் சட்டப்பிரிவான சட்டமா அதிபர் திணைக்களத்திடமே ஒப்படைத்திருக்கின்றது. இதையே அந்த விசாரணையைக் கண்காணிக்கும் சர்வதேசப் பிரமுகர்கள் குழு ஆட்சேபித்திருக்கிறது.

அரசுப் படைகள் மீதான குற்றச்சாட்டை, அரசின் சட்டப்பிரிவான சட்டமா அதிபர் திணைக்களம் விசாரிப்பது பொருத்தமற்றது. இலங்கை அரசின் சட்டமா அதிபர் திணைக்களம், தான் தொடர்பான விசாரணையைத் தானே விசாரணை செய்வது போன்ற நிலையாகும் இதுவென சர்வதேசப் பிரமுகர்கள் குறைகூறியிருக்கின்றார்கள்.

ஆக, குற்றம் சுமத்தப்பட்டவர் தரப்பே குற்றத்தைப் புலனாய்வு செய்யும் முரண்பாடு இந்த நாட்டில்தான் நிகழ முடியும்.

சர்வதேசத்தில் புகழ் பெற்ற முக்கிய பிரமுகர்கள் கொண்ட பதினொரு பேர் குழுவின் கண்காணிப்பின் முன்னாலேயே, இவ்வாறு குற்றம் சுமத்தப்படும் தரப்பே குற்றப்புலனாய்வில் ஈடுபடும் முரண்பாடு அரங்கேறும்போது, 'எதிர்மறைகளின் ஆட்சி நிலவும் அற்புதமான பூமி ஸ்ரீலங்கா!' என்ற வாசகத்தில் என்ன தவறு இருக்க முடியும்?

'இது எங்கள் சிங்கள நாடு' என்று பாடிக்கொண்டிருக்க முடியாது

# சிறுபான்மையினருக்கு உரிமைப் பொதி ஒன்று வழங்கப்பட்டாக வேண்டும்

## முன்னாள் ராஜதந்திரி கொடகே சொல்கிறார்

கொழும்பு ஜூன் 26

சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் பொதியொன்றை நாம் வழங்கியாக வேண்டும். நாம் இனிமேலும் ''இது எங்கள் சிங்கள நாடு'' என்று பாடிக்கொண்டிருக்க முடியாது.

முன்னாள் ராஜதந்திரியும் வெளிநாட்டுறவுகள் விமர்சகருமான கல்யாணந்த கொடகே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாசாவின் 83ஆவது பிறந்த தின வைபவத்தில் அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

சர்வதேச உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு சிறுபான்மை இனங்களைப் பாதுகாக்கும் வகையிலான பொதியொன்றை நாம் அவர்களுக்கு வழங்குவது அவசியம். அந்த உரிமைகள் நசுக்கப்படுமானால் சர்வதேசமட்டத்தில் நாம் தனிமைப்படுத்தி ஒதுக்கப்பட்டு விடுவோம்.

எவரும் எங்களுக்கு மேற்கு நாடுகள் தேவையில்லையென்று சொல்லமுடியாது. உள்ளூரில் தயாரிக்கப்படும் ஆடைகள் பெரு மளவில் மேற்குநாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் போன்றவையும் அந்த நாடுகளாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன.

இன்றைய ஆட்சியாளர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவிடமிருந்தும் ஜே.ஆர்.ஜயவர்னாவிடமிருந்தும் சர்வதேச விடயங்களை எவ்வாறு கையாளுவது என்பதைப் படிக்க வேண்டும் - என்றார். (அ-ப)

## வடமராட்சியில் மீன்பிடித்தடை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்றுமுன்தினம் முதல் நீக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து வல்வெட்டித் துறையிலிருந்து பருத்தித்துறை - கற்கோவளம் வரையிலான வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியான மணல்காடு, அம்பன் ஆகிய கடற் பகுதிகளில் மீனவர்கள் தங்களுடைய தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இம் மீனவர்கள் வழமையான முறையில் கடற்பரப்பில் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று மீன்பிடித்து வருகின்றனர்.

அண்மையில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலையடுத்து இந்தப் பகுதியில் மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## கோழித் தீவன வகைகள் நியாய விலையில் வழங்கப்படும்

### யாழ். வர்த்தக சங்க அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கோழிகளுக்குத் தேவையான தீவன வகைகள், யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினரால் நியாய விலையில் இன்று தொடக்கம் விநியோகிக்கப்பட உள்ளன.

கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதியும், அரசாங்க அதிபரின் வேண்டுகோளின் பேரிலும் கோழித் தீவன வகைகளை யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினர் கப்பல் மூலம் தருவித்துள்ளனர்.

பிறந்த குஞ்சுகள், வளரும் குஞ்சுகள், முட்டை இடும் கோழிகள், புறொயிலர் இனங்களுக்கான கோழித் தீவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் சிபார்சுக் கடிதம் கொண்டு வருபவர்களுக்கு மட்டுமே - கோழித் தீவன வகைகள் வழங்கப்படும் என்று யாழ்ப்பாண வர்த்தக சங்க வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

நியாய விலைகளுக்கு விநியோகிக்கப்படும் கோழித் தீவன வகைகள் சங்க அலுவலகத்தில் வைத்து பகிர்ந்து கொடுக்கப்படும். (அ)

## சாவகச்சேரி, கைதடி வர்த்தக நிலையங்கள் மீது அதிகாரிகள் திடீர்ப் பாய்ச்சல்! 4 பேர் சிக்கினர்!!

யாழ்ப்பாணம், ஜூன் 26

சாவகச்சேரி, கைதடி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது யாழ். செயலக பரிசோதனைக் குழுவினர் கடந்த வாரம் திடீர்ப் பாய்ச்சல் (சோதனை) நடத்தினர்.

செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்த நான்கு வர்த்தகர்கள் இந்தத் திடீர்ச் சோதனையின் போது அதிகாரிகளிடம் சிக்கினர்.

யாழ். மாவட்டச் செயலக பாவனையாளர் அலுவங்கள் அதிகாரசபையின் புலனாய்வுப் பிரிவினர் இத் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

அதிக விலையில் பொருள்கள் விற்றமை, விலைப்பட்டியல் வர்த்தக நிலையத்திற்கு முன்பாக வைக்கப்படாமை ஆகிய குற்றங்களுக்காக இந்த சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் நால்வர் மீது சாவக்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-207)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 26

குடாநாட்டில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று அதனைப் பயன்படுத்துவோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இத்தகவலை வெளியிட்டார்.

குடாநாட்டில் மின்விநியோகத்தை சீரான முறைக்குக் கொண்டுவரும் பொருட்டு இந்த நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சட்ட விரோத மின்பாவணையாளர்கள் உடனடியாகத் தமது செயற்பாட்டை நிறுத்தி மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு சட்டரீதியாக இணைப்புக்களைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேள்கொள்ளுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் மின் விநியோகத்தைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை காரணமாக சீரான முறையில் மின்சாரத்தை விநியோகிக்க முடியாதுள்ளது. மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதற்கு இந்த சட்டவிரோத மின்பாவனையும் முக்கிய காரணியாகும்.

பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் ஆகியோரின் உதவியுடன் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-50)

## போதை எதிர்ப்பு தின பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

இன்று போதை எதிர்ப்பு நாளாகும். போதை எதிர்ப்பு தினத்தை ஒட்டி கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் நடத்திய கட்டுரை, ஓவியப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தின் ஜெபா மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-203)

## மகாபொல பரிசளிப்பு பல்கலையில் முதலாம் திகதி

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2005-2006 ஆம் கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு மகா பொல உயர்கல்வி புலமைப்பரிசில் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் பெறத் தகுதியானவர்களை நிகழ்வில் கலந்துகொள்ளும்படியும் -

அழைப்புக் கடிதங்களை பல்கலைக்கழக நலன்புரிக்கிளையில் உதவிப் பதிவாளரிடம் பெற்றுக்கொள்ளம்படியும் - அரச அதிபர் கே. கணேஷ் கேட்டுள்ளார்.

## உடுவில், இணுவிலில் நேற்றுத் தேடுதல்

உடுவில் தெற்கு மற்றும் இணுவில் பகுதிகளில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

காலை முதல் நடத்தப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது, பாடசாலை மாணவர்களும், உத்தியோகத்தர்களும் எந்தவித தடங்கல்களுமின்றி பாடசாலைக்கும், கடமைக்கும் செல்லக் கூடியதாக இருந்தது.

நண்பகல் வரை நடைபெற்ற இத் தேடுதலில் எவரும் கைது செய்யப்பட்டதாக அறியப்படவில்லை. (அ-202-68)

## 'டயக்லோபெனக்' ஊசி மருந்துக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஜூன் 26

'டயக்லோபெனக் (Diclofenac Sodium Injection) சோடியம் வகைசார்ந்த சகல வகையான ஊசி மருந்துகளையும் இறக்குமதி செய்வது, விற்பனை செய்வது அவற்றைப் பாவிப்பது ஆகியன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த ஊசி மருந்துகள் கைவசம் உள்ளவர்கள் அவற்றை நோயாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டாம் என்று அவர் கேட்டுள்ளார்.

அவற்றை விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகை ஊசி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று நோயாளர்களிடமும் கேட்கப்பட்டுள்ளது. (அ-1-203)

## நாளை

ஆனி - 13 புதன்கிழமை
27.06.2007
திதி : துவாதசி பி.ப. 05.13
நட்சத்திரம் : விசாகம்
பி.ப. 01.20
சுபநேரம் : 04.25 - 05.55
ராகுகாலம் : 11.55 - 01.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை சீராக நிர்வகிக்கும் அரசொன்றை உருவாக்க ஜூலை 26 முதல் போராட்டம்

## ஐ.தே.க. தலைவர் ரணில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற - நாட்டைச் சரியானமுறையில் நிர்வகிக்கின்ற - அரசொன்றை உருவாக்கும் நோக்கில் தற்போதைய மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்ப்பதற்கான மக்கள் போராட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 26 ஆம் திகதி முதல் அரசைக் கவிழ்க்கும் மக்கள் போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்நாட்டின் மீது அக்கறையுள்ள அனைத்து மக்களும் இன, மத் பேதத்தைக் கடந்து இந்தப் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன்இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர் இந்நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அரசியல் கட்சிகளும் கட்சி வேறுபாடுகளை மறந்து தம்முடன் இணையவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனிக்கிழமை ஐ. தே. கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் கட்சியின் மாவட்ட மட்டப் பிரமுகர்களைச் சந்தித்து உரையாடியபோதே ரணில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் மனித உரிமை மீறல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குமலிந்து விட்டன. ஒரு பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் இதனை வெறுமனே பார்த்துக்கொண்டுஎம்மால்இருக்கமுடியாது.

இப்போது இந்த நாட்டை ஆட்சி செய்பவர்கள் மஹிந்தவின் சகோதரர்களான பஸில் ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும்தான்.

பஸில் ராஜபக்ஷ ஜே. ஆர். ஜெயவர்தனவின் ஆட்சியில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்பட்டார். பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர்கட்சியை விட்டு விலகிச் சென்றுவிட்டார்.

கோத்தபாய ராஜபக்ஷ 1990இல் இராணுவ நடவடிக்கையின்போது உயிருக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடியவர்.

இவ்வாறானவர்கள்தான் இப்போது நாட்டை ஆட்சி செய்து சீரழித்து வருகின்றனர்.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளுக்கு விளக்கமளிப்பேன் - என்றார்.

இதேவேளை,

ஒஸ்லோவில் நடைபெறுகின்ற இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டினையொட்டி நேற்று நோர்வே தமிழ்மக்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் முன்பாக நோர்வே நேரப்படி முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை ஒரு மணிநேரம் வரை இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் 300 தமிழர்கள் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்ட முடிவில் இலங்கைக்கான சமாதான சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவரிடம் இணைத் தலைமை நாடுகளுக்கான கோரிக்கை மனு கையளிக்கப்பட்டது.

இந்த மனுவை தமிழ் பெண்கள் அமைப்பின் பிரதிநிதி சுமதி விஜயராஜ் கையளித்தார்.

இந்த போராட்டத்தை நோர்வே தமிழ்ச் சங்கம், நோர்வே இந்து கலாசாரமையம், தமிழர்கள் ஒருங்கிணைப்புக்குழு, கத்தோலிக்க தமிழ் இளையோர் சங்கம், நோர்வே தமிழ் சுகாதார அமைப்பு, தமிழ் வளம் மற்றும் ஆலோசனை அமைப்பு, நோர்வே தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் தமிழ்ப்பெண்கள் அமைப்பு ஆகியவை ஒன்றிணைந்த தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தால் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### பிரேமதாஸவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகிலவிராஜ் காரியவசம், இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோருடன் மாகாண சபை, உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். வெள்ளிக்கிழமை நள்ளிரவு மோட்டார்சைக்கிளில்வந்த இருவர் இச்சிலையை உடைத்தனர்என்று சம்பவத்தை நேரில் கண்ட ஒட்டோ நிலைய சாரதிகள் தெரிவித்துள்ளனர். இந்த நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

### கண்டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வழங்கப்பட்டது.

இத்தகவல் தமக்குக் கிடைக்கப்பெற்ற பின்னர் தாம் தீவிரமான விசாரணையை மேற்கொண்டிருப்பதாக அம்புங்கொரப் பகுதிபொலிஸ்பொறுப்பதிகாரிதெரிவிக்கிறார்.

அப்பகுதிக்கு விசேட பொலிஸ் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக சிலரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருப்பதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (சி)

### முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது ஈடுபாட்டுக்குரிய உலகளாவிய சமாதான விடயங்களில் ஒன்றாக இலங்கை நிலைமையையும் இவர்கள் தங் களுக்குள் விவாதிப்பர்கள் என்று இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

வட அயர்லாந்து சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்டிருந்த சில பிரமுகர்களும் சமாதான ஆர்வலர்களின் இன்றைய கூட்டத்தில் பங்குகொள்வர் என்று தெரிகிறது.

இவர்கள் தாம் ஈடுபாடுகொண்ட சர்வதேச ரீதியிலான சமாதான முன்னெடுப்புகள், அவற்றின் பெறுபேறுகள் ஆகியவை தொடர்பான கருத்துப் பரிவர்த்தனைகளையும் மேற்கொள்வர்.

''இன்றைய கூட்டத்தில் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான விவகாரமே முக்கிய இடம்பெறும்'' - என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தன.

அமெரிக்க செனட்டர்ஜோர்ஜ் மிச்செல், ஜப்பானிய சமாதானத்தூதுவர் யசூசி அகாஷி மற்றும் பல சமாதான ஆர்வலர்கள் ஆகியோரும் இன்று சமூகமளிப்பவர்களில் அடங்குவர் என வட அயர்லாந்து சமாதான முன்னெடுப்புகளுக்கான அனுசரணையாளர் குறிப்பிட்டார். (சி)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு மீது உரிய முறையில் கனதியான அழுத்தங்களைப் பிரயோகித்து தீர்வைக் கொண்டு வரும் சாத்தியப்பாடு இணைத்தலைமை நாடுகளிடம் இல்லை.

எனவே இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாக தொடர்புக் குழுவை இணைத் தலைமை நாடுகள் உருவாக்க வேண்டும். அக்குழு அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான இலக்குடன் முற்றுமுழுதான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்று வலியுறுத்தியுள்ளது அந்த அமைப்பு.

**ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனங்கள் தேவை**

ஒஸ்லோ மாநாட்டின் இன்றைய அமர்வில் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை இரு தரப்புக்களும் பிரகடனம் செய்வதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவேண்டும். அத்தீர்மானங்கள் மூலம் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்யுமாறு இருதரப்புகளிடம் இணையத் தலைமை நாடுகள் கோரவேண்டும் - என்றும் அந்த அமைப்புக் கோரியுள்ளது. (அ-1)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16ஆம் திகதி கொடிகாமம் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு கையொப்பம் இடச் சென்றபின் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, ஊறணியைச் சேர்ந்த சூசைதாசன் அன்ரனிதாஸ்(வயது 26) என்பவர் கடந்த 23ஆம் திகதி படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமற்போனார் என அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

இணுவிலைச் சேர்ந்த நடராஜா ஜெகதீஸ்வரன்(வயது 24) என்பவர் கடந்த 21 ஆம் திகதி கூலி வேலைக்குச் சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்ல என்று அவரது உறவினர்கள் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். (அ-1)

### கப்பலில் தவறவிட்ட மணிக்கூடு நீதிமன்றில்..

காங்கேசன்துறைக்கு வந்த பயணிகள் கப்பலில் பயணஞ்செய்தவர்களால் தவறவிடப்பட்ட மணிக்கூடு ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் தெல்லிப்பழைப் பொலிஸாரால் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மணிக்கூட்டைத் தவறவிட்டவர்கள் ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (அ-1)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை-

வவுனியாவில் படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று மோட்டார் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (அ-1)

### தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இணைத் தலைமை நாடுகள் மத்தியில் இது விடயத்தில் காத்திரமான ஒன்றுபட்ட நிலை இல்லாதிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

வெளிநாடுகளில் சில, அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு அரசாங்கத்தை வற்புறுத்திவரும் அதேவேளை, மற்றும் சில நாடுகள் ஆயுத மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருவது குறித்தும் தமிழ் மக்கள் திகைப்படைகின்றனர்.

கொழும்பு அரசாங்கங்கள், சிங்களத் தலைமைகள் காலத்தை வாங்குவதையும் இனப்பாகுபாடான முறையில் நடந்து கொள்வதையும் சர்வதேச சமூகம் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு விளக்கினார் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலும் கூறியதாவது-

இருபது வருடப் போருக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒரு நல்ல இடைவெளியைத் தந்தது. சர்வதேச நாடுகளின் உதவியுடனேயே இது சாத்தியமாயிற்று. இடையே உண்டான அதிகாரப் போட்டியினால் அமைதி நிலைக்குச் சாதகமாக இருந்த சூழ்நிலை சிதறடிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் மக்களால் முதன்முதலாக முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையையே அரசாங்கம் நிராகரித்துவிட்டது. சுனாமி மீள் கட்டமைப்புக்கான முகாமைத்துவ சபையை நிறுவ இரண்டு தரப்புக்களும் ஒப்புக் கொண்டு கைச்சாத்திட்ட பின்னர் அதனை சிங்களத் தலைவர்கள் அழித்தனர்.

இத்தகைய நடவடிக்கைகளால் தமிழ் மக்களிடம் இருந்த நம்பிக்கையை சிங்களப் பேரினவாதம் சிதறடித்தது.

சிங்களத் தலைமைகளின் இனப் பாகுபாட்டை முறியடிக்க தமிழர்கள் நடத்தி வரும் நீண்ட காலப் போராட்டத்தின் தாற்பரியத்தை சர்வதேச நாடுகள் கடுமையாக நோக்கவேண்டும்.

ஆகையால் சர்வதேச நாடுகள் ஆற்றக் கூடிய பயன்தரவல்ல செயற்பாடு என்னவெனில், அவை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவு நல்கவேண்டும்.

அத்தோடு போர்நிறுத்த ஒப்பந்தத்தை நூற்றுக்கு நூறு வீதம் நடைமுறைப்படுத்தி அமைதிப் பேச்சுக்கு வழிவிடுமாறு அழுத்தம் கொடுக்கவேண்டும் - என்றார். (அ)


## மரண அறிவித்தல்

### கந்தையா சிவஞானசுந்தரம் (சின்னராசு)



அராலியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் நேற்று (25.06.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - விசாலாட்சி தம்பதியரின் மகனும் நாகமணி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் வாசுகி, சந்திரதாசன், கவிதா, கவிவிஜயா, வர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாபரன், தயாகரன், விமல்ராஜ் ஆகியோரின் மாமனும் கனகசுந்தரம், சறோஜினிதேவி, சீதாலட்சுமி, சிவயோகமலர் ஆகியோரின் சகோதரரும் அமரர் மாணிக்க வாசகர் மற்றும் முருகையா, அருமைத்துரை, நாகரத்தினேஸ்வரன் (சிட்டு), நாகதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் துஜந்திகா, மைஷன், நதுர்ஷன், தர்மிதன், கிசாந்தி, நிசாந், பானுஜா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 555/7,
மதவடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
சி. நாகேஸ்வரி
(மனைவி)

## தவறிவிட்டது

யாழ்.நகருக்கும், நாவற்குழிக்கும் இடையில் பயணத்தின் போது கருப்பையா சிவகரன் என்னும் பெயருடைய விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு

By. அன்பழகன் B.sc

- ★ Basic இலிருந்து Industrial வரை முக்கிய பகுதிகளின் மீட்டல்
- ★ எதிர்பார்ப்பு வினாக்கள்
- ★ பிரபல பாடசாலை வினாக்கள்
- ★ அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
- ★ Model Exam
- ★ 80 மணித்தியாலங்கள்
- ★ கட்டணம் 500/=

ஆரம்பம்: 28.06.2007 வியாழன் 9.30
அனுமதிகள் - 26.06.2007 வழங்கப்படும்

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
Properitor -
Poobalasingam

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### கணக்காளர் தேவை

மேற்படி எமது சங்கத்திற்கு முன் அனுபவமுள்ள கணக்காளர் தேவை.

வயதெல்லை - 50 - 65

சங்கத்திலிருந்து 4 கி.மீ. இற்கு உள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்னர் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்தோரும் சமுகமளிக்கலாம். உரிய ஆவணங்களுடன் நாளை (27.06.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்திற்கு நேரடியாக சமுகந்தரவும்.

செயலாளர்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-52759)

## மாநகரசபை யாழ்ப்பாணம்

### வீதியோர தனியார் வாகன தரிப்பிடக் கட்டணம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்ட வீதியோர தனியார் வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மு. செ. சரவணபவ,
ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25.06.2007 (சி-52758)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org